**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 106/2018**
**U/s. 454,380 IPC**
**PROSECUTION WITNESS NO. 4 (LW. 6)**

| | |
|---|---|
| **Name** : தனபால் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2025** |

**1** வது எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார்**. 4,5** வது எதிரி ஆஜர் இல்லை**. 355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 106/2018 27.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.55 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் மாரியம்மன் கோவில் மகேஸ்வரி நகரில் குடியிருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 2017ம் வருடம் ஏப்ரல் மாதம் தேதி ஞாபகமில்லை. தமிழரசன் என்பவரின் வீடு உடைக்கப்பட்டிருந்து அது சம்மந்தமாக போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார்கள். அதில் நானும், மோகன் ராஜ் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>5 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

அசா1 எனக்கு தெரிந்த நபர் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். சம்பவயிடத்தில் கையெழுத்து செய்யாமல் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

**(5 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 4 வது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஏற்று கொள்வதாக கூறினார். )**

**(1 வது எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். அவரது சார்பாக வழக்கறிஞர் யாரும் ஆஜராகவில்லை என்பதால் அவர் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)**

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் – S.T. கனிமொழி.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.